**ஹம்பாந்தோட்டை மாநகர சபை - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபையின் நிரந்தர பதவியணிக்கான உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து மிகையாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 4,771,823 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்த வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யாமல் வருமானம் ஒன்றென நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். | செலவுகளை மீளளிப்புச் செய்து கொள்ளல் சரியான முறையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 917,500 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய குப்பைக் கட்டணம், வாகன வாடகை மற்றும் நீர்க் கட்டணம் கூட்டு வருமானமாகிய ரூபா 182,352 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் கடன் பட்டோர் மீதி மற்றும் வருமானம் அப் பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வருமானத்தை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 1,494,603 இற்கான 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் விரிவான அட்டவணை தயாரித்து சமர்ப்பிப்பேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 11,081,325 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,017,429 தொகையாகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| i. | பேற வேண்டிய வீதவரி ரூபா 2,880,574 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 02 பிரிவுகள் தொடர்பாக 2013 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டின் மீது வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தமையால் பெறுமதி மதிப்பீடு காலரீதியாக செயற்படுத்தப்படாத காலம் 02 வருடங்களாகும். | மீதி நிலுவையை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்காக மற்றும் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை 2021 ஏப்ரல் மாதம் 28 திகதி கிடைத்திருந்தமையால் அந்த தரவுகளை அச்சிடும் அலுவல்கள் முடிவடைந்த பின்னர் வரி அறவீடு செய்யப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்தல் மற்றும் பெறுமதி மதிப்பீடு காலரீதியாக செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | 89 வியாபார அலகுகளில் இருந்து பெற வேண்டியிருந்த வியாபார மற்றும் கைத்தொழில் வரி ரூபா 181,000 மற்றும் குப்பைக் கட்டணம் ரூபா 113,545 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தமையால் கட்டணம் அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| iii. | 160 வீதவரி ஆதனங்கள் ஹம்பாந்தோட்டை துறைமுக அலுவல்களுக்காக நட்டஈடு செலுத்தப்பட்டு பிரதேச செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஆதனங்களில் இருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வீதவரி ரூபா 205,143 தொகையினை அறவீடு செய்வதற்காக போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் அறவீடு செய்ய முடியாத மீதி ஒன்றென கணித்து சபையின் அங்கீகாரத்தின் மீது 2019 பெப்ரவரி 07 திகதிய 8.5 இலக்கம் கொண்ட தீர்மானத்தின் மூலம் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமையால் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. | 2017 ஆண்டின் போது நட்டஈடு செலுத்தும் போது ஆதன உரிமையாளர்களினால் வீதவரி செலுத்துதல் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்காக சபைக்கு அனுப்பும்படி கடிதத்தின் மூலம் பிரதேச செயலாளருக்கு அறிவித்ததுடன், 2018 ஒக்தோபர் 02 திகதிய கடிதத்தின் மூலம் நட்டஈடு செலுத்தி முடிவடைந்திருந்தது என. | ஆதனங்களுக்காக நட்டஈடு செலுத்தி முடிவடைய முன்னர் பெற வேண்டிய மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | குத்தகை<br>---------------- | | |
| i. | சபைக்குச் சொந்தமான கடை அறைகள் மற்றும் கட்டிடங்கள் குத்தகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய கடை வாடகை ரூபா 624,054 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| ii. | வியாபார உரிமையை குத்தகைக்கு கொடுத்தல் மற்றும் சபைக்குச் சொந்தமான வாகனங்களை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக பெற வேண்டிய முறையே ரூபா 640,965 தொகையினை மற்றும் ரூபா 198,500 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| iii. | சபைக்குச் சொந்தமான புதிய நூலகக் கட்டிடத்தின் 301 சதுர அடி கொண்ட பகுதியொன்று 2017 ஜூன் மாதம் முதல் 2024 மே மாதம் வரை காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபைக்கு குத்தகைக்கு கொடுத்திருந்ததுடன், | 2021 ஆண்டு ஜனவரி மாதம் முதல் புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி குத்தகை அறவீடு செய்யப்படுவதுடன், இழக்கப்பட்ட ரூபா 54,825 இற்கான வருமானத்தை அறவீடு செய்வதற்காக எழுத்துமூலம் | பேற வேண்டிய மீதியை அறவீடு செய்வதற்கும், பெறுமதி மதிப்பீட்டுக் குத்தகை ஒன்று அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| குத்தகைக்கு கொடுத்திருந்த திகதி முதல் மீளாய்வாண்டு திசெம்பர் மாதம் வரை 286 சதுர அடிகளுக்கு மாத்திரம் ஒரு சதுர அடிக்கு ரூபா 85 வீதம் குத்தகை அறவிடப்பட்டிருந்தமையால் ரூபா 54,825 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. மேலும், ஒரு சதுர அடிக்கு அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகையினை முறைசார் விதமாக பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிவித்துள்ளேன். | |

(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பெற வேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் அறிவித்தல் பலகை கட்டணம் முறையே ரூபா 259,120 தொகை மற்றும் ரூபா 1,400,400 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் அறிவித்தல் பலகைக் கட்டணம் முறையே ரூபா 10,000 மற்றும் ரூபா 120,000 தொகைகளுக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், மீதியான அறிவித்தல் பலகை கட்டணத்திற்காக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 1,000,000 தொகை காணப்பட்டது. | நிலுவை முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 2.3 மிகை விதிப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புச் சொல்ல வேண்டிய 13 தரப்பினருக்கு எதிராக 2018 ஜனவரி 23 திகதி விதிக்கப்பட்ட ரூபா 218,400 தொகைக்கான மிகை விதிப்பு மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு சபையின் நகர ஆணையாளரினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகை விதிப்பு தொடர்பாக மாநகர முதல்வரினால் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கான பதில் கிடைக்கும் வரை அறவீடு செய்யவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பந்தி 02 மற்றும் 03 இன் பிரகாரம் கடையறை வாடகை பெறுமதி மதிப்பீடு செய்து சபையின் அங்கீகாரம் பெற்றிருந்த போதிலும், சபைக்கு சொந்தமான 50 கடையறைகள் மற்றும் 10 காணிகள் தொடர்பாக பழைய வாடகை அறவீடு செய்யப்படுகின்றமையால் 2016 ஆண்டு ஜனவரி மாதம் முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை சபை நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 11,268,359 தொகை ஆகும். | அனைத்து வாடகையாளருக்கும் கடித்தத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், வாடகையாளர்கள் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு இணங்கியிருக்கவில்லை என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் திண்மக் கழிவுப் பொருள் நிலையத்தில் ரூபா 300 மில்லியன் செலவிடப்பட்டு 2020 ஜுன் 25 திகதி செயற்படுத்தப்பட்ட கவசிமா செயற்திட்டத்தின் மூலம் சேதனப் பசளை உற்பத்தி செய்வற்கு ஒரு நாளைக்கு தொன் 30 இற்கும் 50 இற்கும் இடைப்பட்ட குப்பைத் தொகையொன்று தேவைப்பட்ட போதிலும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் உக்கக்கூடிய குப்பை 01 தொன்னிற்கும் 1.5 தொன்னிற்கும் இடைப்பட்டதுடன், நாளாந்தம் குப்பைத் தேவையினை சேகரித்துக் கொள்வதற்காக சபைக்கு இயலாமல் இருந்ததுடன், அதனை சேகரிப்பதற்கான செயல்முறை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | ஹம்பாந்தோட்டை நகரத்தை மையமாக கொண்டு செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு ஒத்த நிகழ்வாக இந்த செயற்திட்டம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த அபிவிருத்தி செயற்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டமையால் எதிர்பார்த்த குப்பைகளின் எண்ணிக்கையை சேகரிக்க முடியாமல் போனதெனவும், சபைக்கு அண்மையிலுள்ள 04 பிரதேச சபைகளினால் இந்த செயற்திட்டத்திற்காக குப்பைகள் வழங்குவதற்கு முடியாது என எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது என. | முன்சாத்தியக்கூறு ஆய்வொன்றின் பின்னர் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கும், செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கும் செய்முறை ஒன்றும் தயாரிக்க வேண்டும். |